
ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 5 | ஜூன் 2000 | கானம் : 10

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

**(தெய்வீக மாதப் பத்திரிகை)**

வேணு : 5 ஜூன் 2000 கானம் : 11

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 55 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 10 |
| 4. | வேத கதைகள் - 37 | 11 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 25 | 15 |
| 6. | ஜோதிஷம் - 4 | 20 |
| 7. | மஹாபாரத கதைகள் - பதிவ்ரதா மஹாத்மிய பர்வம் - தொடர்ச்சி | 22 |
| 8. | பாலகர்களுக்கு ஒரு கதை - 31 | 25 |
| 9. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 58 | 28 |

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : பைரவி தாளம் : த்ரிபுடை

பல்லவி

| | | |
|---|---|---|
| *ஆகலய ஆகலய* | கோவிந்த – *மாம்* | |
| *பாலய பாலய* | கோவிந்த | *(ஆகலய)* |

சரணங்கள்

| | | |
|---|---|---|
| *பத்மாரமண* | கோவிந்த | |
| *பக்தரக்ஷக* | கோவிந்த | |
| *பஹுஜனஸேவித* | கோவிந்த | |
| *பன்னகசயன* | கோவிந்த | *(ஆகலய)* |
| *மகரகுண்டலதர* | கோவிந்த | |
| *மன்மத ஜனக* | கோவிந்த | |
| *மந்தரகிரிதர* | கோவிந்த | |
| *மணிமயபூஷண* | கோவிந்த | |
| *ஸப்தகிரிவாஸ* | கோவிந்த | |
| *சின்மயரூப* | கோவிந்த | |
| *ச்யாமளவர்ண* | கோவிந்த | |
| *ஸத்யஸ்வரூப* | கோவிந்த | *(ஆகலய)* |
| *வேங்கடரமண* | கோவிந்த | |
| *விச்வபால* | கோவிந்த | |
| *வினதாஸுதவாஹன* | கோவிந்த | |
| *வரமுரளீபூஜித* | கோவிந்த | *(ஆகலய)* |

55

ஸப்தாஹ ஶதக்ருது மஹோத்ஸவம் -
குருபவனபுரம் (குருவாயூர்)
11-5-2000 முதல் 17-5-2000 வரை

நம் ஸ்வாமிகளின் ப்ரேரணையினால், ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவாளின் 105-வது ஜயந்தி மஹோத்ஸவத்தை முன்னிட்டு பெங்களூரில் முதன்முறையாக ''ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ ஶதக்ருது'' 1998-ஆம் ஆண்டு ஜுன் 3-ஆம் தேதி முதல் 9-ஆம் தேதி வரை மல்லேஸ்வரத்தில் காஞ்சி காமகோடி ஶங்கர மடத்தில் 117 பாகவதோத்தமர்கள் மூலம் விமரிசையாக நடத்தப்பட்டது.

''திருப்பதியில் ஸ்ரீநிவாஸன், தனத்தினால் ஆராதிப்பதாலும், பத்ரிகாஶ்ரமத்தில் பத்ரிநாராயணன் ப்ரஹ்மசரியத்தினால் ஆராதிப்பதாலும், திருச்சூரில் உள்ள வடக்குநாதன் அதிர்வேட்டினால் ஆராதிப்பதாலும், ஸ்ரீ குருவாயூரில் உள்ள குருவாயூரப்பன் ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹத்தால் ஆராதிப்பதாலும் ப்ரீதி அடைகின்றார்கள்'' என்று ஸ்ரீ ஸ்வாமிகள் அடிக்கடி கூறுவதுண்டு. இந்த ஆண்டு ஸ்ரீ மஹாபெரியவாள் ஜயந்தி மஹோத்ஸவத்தை குருவாயூரில் ''ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ ஶதக்ரது'' செய்து நடத்தவேணும் என்று ஸ்ரீ ஸ்வாமிகள் தீர்மானித்தார்கள்.

இந்த மஹோத்ஸவத்தை பெங்களூர் குருவாயூரப்பன் ஸப்தாஹ ஶதக்ருது கமிட்டி மூலம் நடத்த ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்றன. மே மாதம் 10–ந் தேதி முதல் 17–ந் தேதி வரை இந்த விழாவை வெகு விமரிசையாக நடத்த காரியக்ரமங்கள் தீர்மானிக்கப்பட்டன. கமிட்டி மெம்பர்கள் இதற்கான ஏற்பாடுகளை சில மாதங்கள் முன்பிலிருந்தே செய்யத் துவங்கிவிட்டனர்.

ஸ்ரீ ஸ்வாமிகளின் அனைத்து பக்தர்களுக்கும் இந்த விழாவில் எப்படியாவது கலந்துகொள்ள வேண்டும் என்ற தீவிரமான ஆர்வமும் எதிர்பார்ப்பும் இருந்தது. எனவே, இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும், பக்தர்கள் அனைவருமே மே மாதம் 9, 10 தேதிகளில் குருவாயூரில்

உள்ள காஞ்சி காமகோடி கல்யாண மண்டபம், ப்ராஹ்மண ஸமூஹம் என்ற ஹாலில் வந்து குழுமினர். முன்னதாக ஸ்ரீ ஸ்வாமிகள், மாதுரிஸகி ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுடன் மே 7-ந் தேதி அன்று சென்னையிலிருந்து புறப்பட்டு குருவாயூர் சென்றடைந்தார்கள். பாகவத ஸப்தாஹத்திற்கு ''பாராயணம்'' செய்யும் பாகவதோத்தமர்களும் வந்து சேர்ந்தனர்.

மே 10–ந் தேதி அன்று காலையில் நன்கு மங்களகரமாக அலங்கரிக்கப்பட்ட ப்ராஹ்மண ஸமூஹ ஹாலில், ஸப்த புண்ய நதிகளில் இருந்து கொண்டுவரப்பட்ட தீர்த்தங்கள் கலஶங்களில் சேர்க்கப்பட்டு கட ஸ்தாபனம் செய்யப்பட்டது. ஸ்ரீஶுகர், ஸ்ரீவ்யாஸர், பாமா ருக்மிணி ஸமேத ஸ்ரீ கோபாலக்ருஷ்ண ஸ்வாமி கடங்களில் ஆவாஹனம் செய்யப்பட்டனர். மேடையில் 108 குருவாயூரப்பனின் விக்ரஹங்கள் அழகாக அலங்கரிக்கப்பட்டு வைத்திருந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. இவ்வாறு ஸப்தாஹ வைபவம் மங்களகரமாக ஆரம்பிக்கப்பட்டது.

10-ந் தேதி மாலை 6 மணிக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் முன்னிலையில் குருவாயூர் கோவிலைச் சேர்ந்த பிரஸித்தி பெற்ற தந்த்ரி ஸ்ரீ சென்னாஸ் தினேஷ் நம்பூதிரியால் குத்துவிளக்கு ஏற்றப்பட்டு ஸப்தாஹ யஜ்ஞம் துவக்கப்பெற்றது. இதைத் தொடர்ந்து குருவாயூர் தேவஸ்தான சேர்மன் ஸ்ரீ வேணுகோபால் குரூப் உரையாற்றினார். குருவாயூரில் இப்படிப்பட்ட ஸப்தாஹ யஜ்ஞம் நடைபெறுவது மிகவும் விசேஷமானது என்றும், அனைவருக்கும் குருவாயூரப்பனின் அருள் இதனால் கிடைக்கும் என்றும் கூறினார். பிறகு மும்பை ராமமூர்த்தி அவர்கள் பேசினார்கள்.

பிறகு நம் ஸ்வாமிகள் ரத்தின சுருக்கமாக அனுக்ரஹபாஷணம் செய்தார்கள். ''எந்தக் காரியமும் கால, தேச, வ்யக்தியினால் அதிக ஶ்ரேஷ்டமாகிறது. நாம் ஸப்தாஹம் நடத்தும் காலமோ ஸ்ரீ ஶங்கர ஜயந்திக்கும் ஸ்ரீ மஹாபெரியவாள் ஜயந்திக்கும் இடைப்பட்ட மஹாபுண்யகாலம். க்ஷேத்ரமோ, ஸ்ரீ குருவாயூரப்பனின் க்ஷேத்ரமான பாகவத பூமியான குருவாயூராகும்.

இங்கு குருவாயூரப்பனே ஶ்ரோதாவாக இருக்கிறான். உலகிலே நாம் இருவரைத்தான் ஜகத்குரு என்கிறோம். ''க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்'' என்கின்றபடி ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவையும், ஆதிசங்கர பகவத்பாதாளையும் தான் ஜகத்குரு என்று சொல்கிறோம். இதன்படி ஜகத்குருவான ஸ்ரீ மஹாபெரியவாள் ஜயந்தியை ஜகத்குரு குருவாயூரப்பனின் ஸன்னிதானத்தில் நடத்துவது என்ன அழகு.

ப்ரஸித்தமாக, ப்ரஹ்மஸூத்ரம், கீதை, உபநிஷத் முதலியவற்றை ப்ரஸ்தானத்ரயம் என்கிறோம். ப்ரஸ்தானசதுர்த்தமாக விளங்கும் ஸ்ரீமத் பாகவதமோ நாமம், ரூபம், கர்மம் என்று மூன்றாக விளங்குகின்றது. இவற்றிற்குள் ப்ரபஞ்சமானது அடங்கிவிடுகிறது. ப்ரஸித்தமாக ப்ரஸ்தானத்ரயம் என்றழைக்கப்படும் ப்ரஹ்மஸூத்ரம், கீதை, உபநிஷத் முதலியவை ஸாதனாக்ரந்தங்கள், பாகவதமோ ஸாத்யக்ரந்தம். ஆகவேதான் ஶுகர் போன்ற ப்ரஹ்மநிஷ்டரையும் ஆகர்ஷிக்கிறது'' என்று ஸ்ரீ ஸ்வாமிகள் கூறினார்கள்.

பாகவத அம்சமாகவே விளங்கிய ஸ்ரீ ஆஞ்சன் நம்பூதிரியின் ஸகோதரர், ஸ்ரீ க்ருஷ்ணன் நம்பூதிரியும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். ஸ்ரீமான் நாராயணன் அவர்கள் நன்றியுரை நவின்றார்கள். ஸப்தாஹத்தில் கலந்துகொள்ள வந்த பாகவதோத்தமர்கள் அனைவருக்கும் ஸ்ரீமத் பாகவத க்ரந்தம், ஜபமாலை, தர்ப்ப ஆசனம், ஸரஸ்வதி பீடம், நாம வஸ்த்ரம் போன்றவைகள் ஸமர்ப்பிக்கப்பட்டன. இதன் பிறகு ஸ்ரீ ஸ்ரீகாந்தஶர்மா அவர்களால் பாகவத மஹாத்மியம் படனம் நடைபெற்றது. அதற்குப் பிறகு ஸ்ரீ ஸ்ரீகாந்த ஶர்மா அவர்கள் ஸ்ரீமத் பாகவத மஹாத்மியம் பற்றி உபன்யாஸம் நிகழ்த்தினார்கள்.

மறுநாள், 11-ந் தேதி வியாழக்கிழமை அன்று, ஸப்தாஹ மூல பாராயணம் ஆரம்பதினம். முதலில் காலை 5 மணிக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் பக்த ஜனங்களுடன் ஸ்ரீ குருவாயூரப்பன் கோவில் முன்பு ஆரம்பித்து கோவிலைச் சுற்றி நாம ஸங்கீர்த்தனத்துடன் வீதி பஜனை செய்தார்கள். பிறகு சரியாக 6 மணிக்கு ப்ராஹ்மண ஸமூஹ மடத்தில் பாகவத ஸப்தாஹ பாராயணம் துவங்கியது. ஸ்ரீ ஸ்ரீகாந்தஶர்மா த்யான ஶ்லோகங்கள் சொல்ல பாராயணம் ஆரம்பமாகிறது. மதியம் சுமார் 12 மணி வரை பாராயணம் நடைபெற்றது. அனைவரும் சேர்ந்து **பா**வத்துடன் பாராயணம் செய்வதைக் கேட்கவும், காணவும் மிகவும் ரம்யமாகவும் ஆனந்தமாகவும் இருந்தது, பகல் 12 மணிக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் தீர்த்தப்ரஸாதம் அளித்தார்கள்.

மதியம் 3 மணி முதல் நாராயணீயம் படனம் நடைபெற்றது. மாலை 5 மணிக்கு ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் நடைபெற்றது. பிறகு, 6 மணி முதல் 8 மணி வரை பாகவத உபன்யாஸம் ப்ரம்மஸ்ரீ ஸ்ரீகாந்தஶர்மா அவர்களால் நிகழ்த்தப்பட்டது. அதன் பிறகு இரவு 10 மணி வரை திவ்யநாம ஸங்கீர்த்தனமும் அதை அடுத்து மாதுரி ஸகி ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு டோலோத்ஸவமும் நடைபெற்றது.

இவ்விதம் ஏழு நாட்களும் காலை முதல் இரவு வரை அனைவருக்கும் க்ருஷ்ண த்யானமும் பகவத் விஷயமாகவே இருந்து வந்தது.

மே 14-ந் தேதி ஏகாதஶீ அன்று வழக்கம் போல் காலை 5மணிக்கு நகர ஸங்கீர்த்தனம் ஆரம்பமாகியது. ஸ்ரீ ஸ்வாமிகள் **பா**வத்துடன் நர்த்தனம் செய்து நாமஸங்கீர்த்தனம் செய்தார்கள். பிறகு பாகவத பாராயணம் தொடர்ந்து நடைபெற்றது. இன்று பாகவத பாராயணத்தில் ஸ்ரீ க்ருஷ்ண ஜனனம் கட்டம் வருவதால் ஸ்ரீக்ருஷ்ண விக்ரஹத்திற்கு திருமஞ்சனம் நடைபெற்றது. ஸ்ரீ க்ருஷ்ணனுக்கு ஸஹஸ்ர எண்ணிக்கையில் பக்ஷணங்கள் ஸமர்ப்பிக்கப்பட்டன.

வேதம், ஸூக்தங்கள் பாராயணம் செய்யப்பட்டன. மதியம் 3 மணியளவில் நாராயணீய பாராயணமும், மாலையில் ப்ரவசனமும் நடைபெற்றது. உத்ஸவத்தில் தினமும் இரவில் திவ்யநாமத்தில் பாராயணம் செய்யும் பாகவதர்கள் முதற்கொண்டு சிறுவயது பாலகர்கள் வரை உத்ஸாஹமாக கலந்து கொண்டது மிகவும் ரம்யமாக இருந்தது.

மே 15-ந் தேதி திங்கட்கிழமை, 5 மணிக்கு ப்ரஹ்மஸ்ரீ யஜ்ஞராமஶர்மா அவர்களால் உஞ்சவ்ருத்தி பஜனை நடைபெற்றது. பிறகு 6 மணிக்கு பாகவத பாராயணம் நடைபெற்றது. இன்று பாராயணத்தில் ருக்மணி கல்யாண கட்டம் என்பதால் பகவானுக்கு புடவை, வேஷ்டி, பருப்புத்தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம், தாம்பூலங்கள் ஸமர்ப்பிக்கப்பட்டன. மதியம், கேரளத்தில் பாகவதத்தில் ப்ரஸித்தியான மம்மியூர் நாராயணன் நம்பூதிரி அவர்கள் ருக்மிணி கல்யாணம் பற்றி பேசினார்கள். ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்களை கௌரவித்தார்கள்.

அன்று மாலை 5 மணிக்கு நம் ஸ்வாமிகள் மிஷன் சார்பாக வேதத்தின் நயனம் என்று சொல்லப்படும் ஜ்யோதிஷ ஶாஸ்த்திரத்தில் நிபுணரான ஸ்ரீ உன்னிக்ருஷ்ணன் அவர்களுக்கு ‘‘ஜ்யோதிஷ மார்த்தாண்ட’’ என்ற விருதை அளித்து கௌரவித்தார்கள். ஸ்ரீ உன்னிக்ருஷ்ணன் அவர்களும் விருதை ஏற்று மிகவும் வினயமாக தனது பெருமையெல்லாம் ஜ்யோதிஷ ஶாஸ்த்ரத்தையே சேரும் என்று கூறினார். ஜ்யோதிஷ ஶாஸ்த்ரத்தின் அஷ்டமங்கல ப்ரஶ்னம் என்ற பிரிவில் மஹா நிபுணத்துவம் வாய்ந்தவர் ஸ்ரீ உன்னிக்ருஷ்ணன்.

இவர் குருவாயூர் கோவிலுக்கும் மற்றும் கேரளத்தைச் சேர்ந்த அனைத்து கோவில்களுக்கும் ஆஸ்தான ப்ரஶ்ன ஜோதிடராவார். மேலும்

தமிழ்நாட்டு வைணவ திருப்பதிகளுக்கும் இவரது தொண்டு கிடைக்கப் பெற்றுள்ளது. ஸ்ரீ மஹாபெரியவாளுக்கு இப்படிப்பட்ட வேதத்தை சார்ந்த கலைகளில் ப்ரீதி அதிகம். எனவே, அவரது ஜயந்தி மஹோத்ஸவத்தில் ஜ்யோதிஷ ஶாஸ்திர நிபுணரான ஸ்ரீ உன்னிக்ருஷ்ணனை கௌரவித்தது மிகப் பொருத்தமே!

மே 16-ந் தேதி அன்று பாராயணத்திற்கு பிறகு 12 மணிக்கு ஸ்ரீ ஸ்வாமிகள், அவர்கள் கரங்களினால் அனைவருடைய சிரசிலும் கங்கை தீர்த்தம் தெளித்து அனுக்ரஹித்தார்கள்.

ஸப்தாஹபூர்த்தி மே 17-ந் தேதி அன்று காலை பாராயணம் முடிந்தவுடன் அவப்ருத ஸ்நானத்திற்கு ஸ்வாமிகளும் பாகவதோத்தமர்களும் பக்த ஜனங்களும் குருவாயூர் தீர்த்தமான நாராயண தீர்த்தத்திற்கு செல்லக் கிளம்பியதும், முதலில் புஷ்பமாரிபோல் மழை பெய்யத்தொடங்கியது. பிறகு பலத்த மழை கொட்டவும் அனைவருக்கும் ஆனந்தம் கரைபுரண்டோடியது. ஸ்ரீ ஸ்வாமிகளும் பக்தர்களும் ஆனந்தக் கூத்தாடிக்கொண்டே நாம ஸங்கீர்த்தனம் செய்து கொண்டு வீதிகளில் ஓடிச் சென்று திருக்குள தீர்த்தத்தை அடைந்து அவப்ருதஸ்நானம் முடித்து திரும்புகையில் மழை நின்று பளிச்சென்று சூரியபகவான் வெளிக் கிளம்பி வந்து அனைவரையும் அனுக்ரஹித்தார்.

இவ்வாறு வருண பகவானும் தனது ப்ரீதியை அனுகூலமாக தெரிவித்தது அனைவருக்கும் பேரானந்தமாக இருந்தது. பிறகு பாகவதர்களுக்கு ஸ்வாமிகள் முன்னிலையில் ஸன்மானம் வழங்கப் பெற்றது. பெங்களூர் ஸ்ரீமான் மூர்த்தி அவர்கள் இரவு பகல் பாராமல் ஸப்தாஹத்தில் ஸேவை செய்தது பற்றி ஸ்ரீ ஸ்வாமிகள். ''நான் இந்த யஜ்ஞத்திற்கு நிமித்த காரணம். மூர்த்திதான் ப்ரத்யக்ஷ காரணம்'' என்று கூறி அவரது ஸேவையைப் பாராட்டி, அவருக்கு ஸ்ரீ ஸ்வாமிகளே ஸ்வர்ண கங்கணம் அணிவித்தார்கள்.

பூர்த்தியில் நம் ஸ்வாமிகள் உரை நிகழ்த்தும்பொழுது, ''மேலும் மேலும் பக்தி ருசி தழைக்கவேண்டும் என்று ஆசைப்படுபவர்கள், ப்ருந்தாவனம் செல்லவேண்டும். மேலும் மேலும் ஞான ருசி வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள், காசிக்குச் செல்லவேண்டும். தபோ ருசி வளரவேண்டும் என்று ஆசைப்படுபவர்கள், பத்ரிகாஶ்ரம் செல்ல வேண்டும். பாகவத ருசி வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள், குருவாயூருக்கு செல்லவேண்டும்'' என்றும், குருவாயூர் ஸப்தாஹ பூமி என்றும் ஸ்ரீ ஸ்வாமிகள் கூறினார்கள்.

மேலும் ஸ்ரீ ஸ்வாமிகள் பேசும்பொழுது, ''பாகவதத்தின் மற்றொரு ஸ்வரூபமான நாராயணீயத்தை இதே க்ஷேத்ரத்தில் பட்டத்ரி எழுதும் பொழுது, குருவாயூரப்பன் தலையசைத்து கேட்டுக்கொண்டிருந்தான். இப்பொழுதும் நாம் சொல்லும் பாகவதத்தை ஸ்ரீ குருவாயூரப்பன் கேட்டுக் கொண்டிருக்கிறான். ஏனென்றால் நாம் சொல்லும் பாகவதம் அதே பாகவதம். இங்கு இருக்கும் குருவாயூரப்பனும் அதே குருவாயூரப்பன். பட்டத்ரிக்கு பகவானைப் பார்க்கக்கூடிய யோக்யதை இருந்தது.

இந்த பாராயணத்தில் பல யாகம் செய்தவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இதுவரை செய்த கர்மாவின் பலன் குருவாயூர் க்ஷேத்ரத்தில் ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹத்தில் கலந்து கொண்டதால் ஸபலமாகியது. மேலும் பல வேத அத்யயனம் செய்தவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். அதன் பலன் இந்த ஸப்தாஹத்தில் கலந்துகொண்டதால் ஸபலமாகியது. இதுபோல் எந்தெந்த தர்மங்களை அவரவர்கள் அனுஷ்டித்தார்களோ அதன் பயன்தான் இந்த ஸப்தாஹத்தில் கலந்துகொண்டது'' என்று ஸ்ரீ ஸ்வாமிகள் கூறினார்கள்.

இதை அடுத்து இந்த பாகவத ஸப்தாஹ ஸதக்ரதுவில் தலைமையேற்று பாராயணம் செய்த ராஜூ, சந்துரு அவர்களை சிறந்த முறையில் விளங்க வைத்த ஸ்ரீ ஸ்ரீகாந்தஸர்மாவைப் பாராட்டி சென்னை மயிலை ஸம்ஸ்க்ருத கல்லூரி முதல்வர் மூலம் அவரை விசேஷமாக கௌரவித்தார்கள்.

''இன்று ஒரு குறையும் இன்றி நிர்விக்னமாகி பாகவத ஸப்தாஹம் பூர்த்தியானாலும் ஒரே ஒரு குறை இருக்கிறது. நாளை காலை 5 மணிக்கு ஸ்ரீ ஹரயே நம: ஸ்ரீ ஹரயே நம: என்ற ஸப்தம் காதில் விழாதே என்று நினைக்கும்பொழுது ஏற்படும் துக்கம்'' என்று ஸ்ரீ ஸ்வாமிகள் கூறினார்கள். அன்று மதியத்திலிருந்து பாகவதர்கள் அஷ்டபதி பாட ஆரம்பித்தனர். அன்று மாலை 6 மணிக்கு கோவிலில் நமது மிஷன் ஸார்பில் லக்ஷ தீபங்கள் ஏற்றப்பட்டன.

அதே ஸமயத்தில் ஸ்ரீமத் பாகவத க்ரந்தம், ஸ்ரீ குருவாயூரப்பன் திருஉருவப்படம் ஒரு யானையிலும், ஸ்ரீ மஹாபெரியவாளின் நன்கலங்கரிக்கப்பட்ட படம் ஒரு யானையிலும், ஸ்ரீ மாதுரிஸகி ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதன் ஒரு யானையிலுமாக நன்றாக அலங்கரிக்கப்பட்ட மூன்று யானைகளில் உபய ஸாமரங்களுடன் வீதிபுறப்பாடு மிக விமரிசையாக நடைபெற்றது. கேரளத்து பாணியில் பஞ்ச வாத்யங்கள்

முழங்கிக்கொண்டு வந்தன. குருவாயூரப்பன் ஸன்னதி முன்பு மூன்று யானைகளும் நின்று துதிக்கையை தூக்கி ப்ரணாமம் செய்ததும், சுற்றி வலம் வந்ததும், கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. உள்ளூர் ஜனங்களும் இந்த ஸப்தாஹ யஜ்ஞத்தில் பெருவாரியாக கலந்து கொண்டது மிகவும் விசேஷமாக இருந்தது. தினமும் காலையில் ஸ்ரீ ஸ்வாமிகள் நடத்திய வீதி பஜனையிலும் உள்ளூர் ஜனங்கள் ஆர்வமுடன் கலந்துகொண்டனர்.

18-ந் தேதி காலை வீதி பஜனையில் நம் ஸ்வ1ாமிகள் பக்தர்களுடன் மேற்கு வாசல் மூலமாக கோயிலுக்குள் நுழைந்து, வலம் வந்து நாமஸங்கீர்த்தனம் செய்தார்கள். இரண்டு அஷ்டபதிகள் கோவிலிலேயே பாடினர். குருவாயூரப்பன் தர்சனத்திற்காக நின்றிருந்த பெருவாரியான ஜனத்திரள் நமது நாமஸங்கீர்த்தனத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டும் உடன் வாங்கிப் பாடியும் மகிழ்ந்தனர்.

பிறகு நமது ஸமூஹ மடத்திற்கு வந்து முறைப்படி உஞ்சவ்ருத்தியும், பாகவத ஸம்ப்ரதாயப்படி ராதா கல்யாணமும் நடைபெற்றது. ராதா கல்யாணம் பூர்த்தியானவுடன் ஸ்ரீ ஸ்வாமிகள் அனைவருக்கும் தீர்த்தப்ரஸாதமும் மந்த்ராக்ஷதையும் தன் கரங்களினால் வழங்கினார்கள். இந்த ஸப்தாஹ ஸதக்ருதுவில் கலந்துகொள்ள பல ஊர்களிலிருந்தும் பக்த ஜனங்கள் திரளாக வந்திருந்தனர். கேரளத்து ''மாத்ருபூமி'' என்ற பத்திரிகையும் இப்படிப்பட்ட ஸப்தாஹ ஸதக்ருது இந்த குருவாயூரில் நடைபெற்றது இதுவே முதல் முறையாகும் என்று வர்ணித்துள்ளது.

''கோடி ஜன்ம புண்ய பலத்தினால்தான் இப்பேர்பட்ட வைபவத்தில் கலந்துகொள்ளும் பாக்யம் கிட்டும். இதில் எந்த விதத்திலாவது ஸம்பந்தப்பட்டிருந்தாலும் அவர்களுக்கும் ஸர்வ மங்களமும் உண்டாகும்'' என ஸ்ரீ ஸ்வாமிகள் அனுக்ரஹித்தார்கள். குருவாயூரைவிட்டு பிரிய மனமில்லாமல் அனைவரும் தத்தம் ஊரை நோக்கி பயணமானார்கள்.

ஸப்தாஹ ஸதக்ருதுவின் வைபவத்தில் ஆழ்ந்துபோனதின் பரிணாமமாக அடுத்த ஸப்தாஹ ஸதக்ருதுக்கள் ராமேஶ்வரத்திலும், ஸ்ரீப்ருந்தாவனத்திலும், ஹரித்வாரிலும் முறையே 2000 அக்டோபர், 2001 மார்ச், 2001 மே மாதங்களில் நடத்துவது என்று தீர்மானம் செய்யப்பட்டன. இது பற்றி மேலும் விவரங்கள் பிறகு அறிவிக்கப்படும்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : ஸப்தாஹ ஶதக்ரது என்றால் என்ன?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஸ்ரீமத் பாகவதத்தை 108 முறை ஒருவர் பாராயணம் செய்து முடித்தால் அது அவர் ஒரு பெரிய ஞானயஜ்ஞம் செய்ததற்கு ஸமம். அதற்கு ஸப்தாஹ ஶதக்ரது என்று பெயர்.

*கேள்வி : தொடர்ந்தார்போல் செய்யவேண்டுமா?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : அப்படி ஒன்றும் அவசியமில்லை. நூற்றுயெட்டு முறை பாகவத பாராயணம் ஸப்தாஹமாக செய்து முடிக்கவேண்டும்.

*கேள்வி : தாங்கள் நூற்றியெட்டு பாகவதர்களை சேர்ந்தாற்போல் வைத்து பாராயணம் செய்கின்றீர்களே?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : இப்படியும் செய்யலாம். ஆனால் ஒருவர் தனியாக நூற்றியெட்டு முறை பாராயணம் செய்வதுதான் அதி விசேஷம்.

*கேள்வி : ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம் என்றால் என்ன?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஸ்ரீமத் ராமாயணத்தை 24 முறை பாராயணம் செய்வதற்கு ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம் என்று பெயர். இதுவும் ஒருவர் தனியாக படிப்பதுதான் விசேஷம். 24 பாகவதர்கள் சேர்ந்தும் படிக்கலாம்.

*கேள்வி : சேர்ந்தார்போல் படிக்கும்பொழுது சிலர் மௌனமாக பாராயணம் செய்து வருகின்றார்களே?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : மௌனமாக பாராயணம் செய்வதும் விசேஷம்தான்.

*கேள்வி : இதுமாதிரியான ஸமயங்களில் அதாவது ஸப்தாஹ மஹோத்ஸவ காலங்களில் விமரிசையாக ஆகார ஏற்பாடுகள் செய்யாமல் லகுவாக செய்தால் போதுமே?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : க்ரது என்றாலே யஜ்ஞம். யஜ்ஞத்திற்கு வருபவர்கள் எல்லாரும் திரும்பி போகும்பொழுது பருத்துச் செல்லவேண்டும் என்பது ஶாஸ்த்ர விதி. அந்த அளவிற்கு அன்னம் விமரிசையாகப் போட வேண்டும். யஜ்ஞத்தை நடத்துபவர்கள் மட்டும் வரும்பொழுது இருந்ததைவிட முடிந்து செல்லும்பொழுது மிகவும் இளைத்து இருக்க வேண்டும். கீர்த்தனம், கதாஶ்ரவணம், பூஜை எல்லாம் எப்படி ஸப்தாஹ யஜ்ஞத்தில் ஒரு அங்கமோ, அதுபோல் வருபவர்களுக்கெல்லாம் உயர்ந்த முறையில் அன்னம் போடுவதும் ஒரு அங்கமாகும்.

# வேத கதைகள் - 36

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## க்ஷத்ரியனுக்கு ஸோமபானம் நிஷேதம்

அழகான அரண்மனையை கட்டிய சுபத்மா எனும் ஓர் அரசன் இருந்தான். அந்த சுபத்மனின் பிள்ளை ஸௌபத்மனன். அவனுக்கு விஶ்வம்பரன் எனப் பெயர். அவன் ஒரு ஸமயம் யாகம் செய்ய விரும்பியவனாக ஶ்யாமபர்ணர்கள் எனும் பெயருள்ள உயர்ந்த ப்ராஹ்மணர்களை ரித்விக்குகளாக ஏற்றுக்கொள்ளாமல் ஒரு யாகத்தை அனுஷ்டித்தான். இவை எல்லாவற்றையும் அறிந்த ஶ்யாமபர்ணர்கள் என்ற ப்ராஹ்மணர்கள், அரசனால் அழைக்கப்படாதபவர்களாகவே அவன் யாகத்தை அடைந்தனர். அவர்கள் அரசனின் அனுமதி இல்லாமலேயே யாக சாலையின் நடுவில் தானாகவே அமர்ந்தனர்.

அரசன், வரம்பு மீறின ப்ராஹ்மணர்களைப் பார்த்து கோல் ஏந்திய தன் வேலைக்காரர்களிடம், ''இந்த ஶ்யாமபர்ணர்கள் என்ற அந்தணர்கள் பேசக்கூடாத சொற்களை பேசுகிறார்கள். என்னை அவமதிக்கிறவர்கள். பாபம் செய்பவர்கள். என்னை வம்புக்கு இழுப்பவர்களாக தோன்றுகிறார்கள். என்னுடைய யாக சாலையில் என் அனுமதி இல்லாமல் தானாகவே அமர்ந்த இவர்களை நீங்கள் கிளப்பிவிடுங்கள்'' என்று கூறினான்.

இவ்விதம் அரசனால் ஏவப்பட்ட பிரம்பு ஏந்திய சேவகர்களால் எழுப்பப்பட்ட அந்த அந்தணர்கள் உரக்க ஒலி எழுப்பினர். அவர்களில் சிலர், மற்றவர்களைப் பார்த்து ஒரு பழைய கதையை கூறினர்.

பரிக்ஷித்து என்ற அரசனின் பிள்ளையான ஜனமேஜயன் என்ற அரசன் கஶ்யப கோத்ரத்தில் பிறந்த ப்ராஹ்மணர்களை அழைக்காமல் பூத வீரர்கள் என்ற பெயருள்ள ப்ராஹ்மணர்களைக் கொண்டே யாகம் செய்தான். அப்பொழுது கஶ்யபர்களுக்கு நடுவில் அஸிதம்ருகர்கள் என்ற புருஷர்கள் ஜனமேஜயனால் செய்யப்படுகிற ஸோமயாகத்தை அந்த பூத வீரர்கள் என்ற பெயருள்ள ப்ராஹ்மணர்களிடமிருந்து பலாத்காரமாக கவர்ந்து தாங்கள் வெற்றி பெற்றார்கள்.

பல யாக ப்ரயோகங்களில் வெற்றி பெறுவதற்கான வாதம் புரிந்து அந்த பூத வீரர்கள் என்ற ப்ராஹ்மணர்களை தோற்கடித்து வெற்றி பெற்ற அஸிதம்ருகர்களோடு ஒன்று சேர்ந்து கஶ்யபர்கள் ஜனமேஜயன் யாகத்தில் வலிமை பெற்றார்கள். இந்தக் கதையை கூறி ஶ்யாமபர்ணர்கள் தன்னை சார்ந்தவர்களை பார்த்து, ''அரசனால் விலக்கப்பட்ட நம் நடுவில் விஶ்வம்பரன் என்ற அரசனுடைய ஸோமயாகத்தை ஜயிக்கக் கூடிய ஒரு வீரன் இருக்கிறானா? என்று ஒரு வினாவை எழுப்பினார்''.

அப்பொழுது, ம்ருகவு என்ற ஒரு பெண்ணின் பிள்ளையான ராமன் என்ற ப்ராஹ்மணன் எழுந்து, ''ஓ, ஶ்யாமபர்ணர்களே, உங்களுக்குள் விரோதிகளை ஜயிக்கக்கூடிய சூரனாக நான் இருக்கிறேன்'' என்று கூறினார். ஶ்யாமபர்ணர்கள் என்ற ப்ராஹ்மணர்களைச் சார்ந்த ராமன் என்பவர் 6 அங்கங்களோடு கூடிய வேதங்கள் ஶாஸ்த்ரங்கள் இவைகளின் கரை கண்டவராக இருந்தார்.

யாக சாலையிலிருந்து ஶ்யாமபர்ணர்கள் எழுப்பப்படும்போது ராமன் அரசனான விஶ்வம்பரனை பார்த்து, ''ஓ, அரசனே, யாகத்தின் ப்ரயோகங்களை நன்கு அறிந்த என்னையும் உன்னுடைய வேலைக்காரர்கள் வேதியிலிருந்து எழுப்புகிறார்கள். இது தகாத செயல்'' என்று கூறினார். அதைக் கேட்டு ''ஓ, ப்ராஹ்மணனே, திமிராக பேசுகிற நீ எவ்விதம் ப்ரயோகங்களை அறிந்தவனாக ஆவாய்'' என்று அரசன் அந்தணனைப் பார்த்து கூறினான்.

அதற்கு அவர் பதில் கூறினார். முன்பு ஒரு ஸமயம் இந்திரன் மேல் ஐந்து குற்றங்களை சுமத்தி யாகங்களிலிருந்து அவனை விலக்கி வைத்தனர். அதனால் இந்திரன் யாகங்களில் ஸோமபானமற்றவனாய் ஆனான். அவன் மீது சுமத்தப்பட்ட ஐந்து குற்றங்களாவன; (1) த்வஷ்டாவின் பிள்ளையான விஶ்வரூபன் என்ற ப்ராஹ்மணனை கொன்றான். (2) அவ்விதமே த்வஷ்டாவினால் உண்டு பண்ணப்பட்ட வ்ருத்ரன் என்ற ப்ராஹ்மணனையும் கொன்றான். (3) அவ்விதம் துறவி வேடம் பூண்ட அசுரர்களை கத்தியால் வெட்டி காட்டு நாய்களுக்கு ஆஹாரமாக அளித்தான். (4) மேலும் அருர்மகா: என்ற ப்ராஹ்மண வேடம் அணிந்த அரக்கர்களையும் கொன்றான். (5) தன் குருவான ப்ரஹஸ்பதியின் சொல்லை தன் சொல்லால் கடுமையாக எதிர்த்தான் என்பதாகும்.

இந்த ஐந்து குற்றங்களால் இந்திரனுக்கு ஸோமபானம் தடைபட்டதால் க்ஷத்ரியர்கள் முழுவதும் ஸோமபானம் அற்றவர்களாக ஆனார்கள்.

தேவர்களுக்குள் இந்திரன், க்ஷத்ரியன். இந்திரன் ஸோமபானத்திலிருந்து விலக்கப்பட்டாலும் ஸோமபானத்தின் ஆசை உள்ளவனாக த்வஷ்டாவின் ஸோமயாகத்தில் யாகத்தை கெடுத்து பலாத்காரமாக ஸோமபானம் செய்தான். திறமையால் இந்திரனுக்கு ஸோமபானம் கிடைத்தாலும் மற்ற க்ஷத்ரியர்கள் ஸோமபானம் அற்றவர்களாகவே ஆயினர்.

''ஆனாலும் ஸோமபானம் செய்வதால் எந்த வலிமை ஏற்படுமோ அதற்கு நிகராக வேறு ஒன்றை குடித்தால் அந்த க்ஷத்ரியர்களிடத்தில் வலிமை ஏற்படும். அப்படிப்பட்ட வலிமை அளிக்கக்கூடிய பொருளை அறிந்த என் போன்றவர்களைக் கூட இந்த பிரம்பு ஏந்தியவர்கள் வேதியிலிருந்து கிளம்புகிறார்கள்'' என்று ராமர் வருந்தினார். ப்ராஹ்மணரே, அரசர்களுக்கு வலிமை அளிக்கக்கூடிய பொருளை நீர் அறிவீரா, என்று விஶ்வம்பரன் ராமரைப் பார்த்து கேட்டான்.

அதற்கு ராமன் பதில் கூறினார். க்ஷத்ரியனுக்கு மூன்று விதமான பக்ஷங்கள் தள்ளப்பட்டவைகள், ஒன்றுதான் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தள்ளத் தக்கவைகள் ஸோமரஸம், தயிர், ஜலம். ஓ, அரசனே! உன்னுடைய யாகத்தில் இந்த நியமங்களை ஒன்றும் அறியாத உன்னால் வரிக்கப்பட்ட அத்வர்யுவானவர், உனக்கு ஸோம ரஸத்தை அளித்தார். ப்ராஹ்மணர்களை மட்டும் உன்னால் மகிழ்விக்கக் கூடும். க்ஷத்ரியனுக்கு உன்னால் மகிழ்ச்சி அளிக்க முடியாது. உன் ஸந்ததியில் பராக்ரமம் அற்ற ப்ராஹ்மணனுக்கு ஒப்பான பிள்ளைதான் பிறக்கும். ப்ரதிக்ரஹம், யாசனம், இவைகளைதான் உன்னுடைய ஸந்ததியினர் செய்யக்கூடும். இவையாவும் ப்ராஹ்மணர்களுக்கு உரியவைகள். க்ஷத்ரியர்களுக்கு இவைகள் ஒவ்வாதவைகள். பலமற்றதால் வீட்டிலிருந்தோ கிராமத்திலிருந்தோ ஒரு ப்ராஹ்மணனை அரசனால் விலக்கமுடியும். ஆதலால் க்ஷத்ரியன் ஸோமபானம் செய்தால் ப்ராஹ்மணனை போன்ற துர்பலமான பிள்ளைதான் பிறக்கும். ஆதலால் க்ஷத்ரியனுக்கு ஸோமபானம் தகுதியற்றது.

தயிர் பக்ஷமாக ஆனால் வைச்யர்களுக்கு மட்டும் த்ருப்தி அளிக்கப்படும். வைச்யனுக்கு ஒப்பான பிள்ளைதான் பிறப்பான். அல்லது ஜலத்தை ஏற்றால் சூத்ரனுக்கு த்ருப்தி ஏற்படும். சூத்ரனுக்கு ஒப்பான பிள்ளைதான் பிறப்பான். சூத்ரன் மூன்று வர்ணத்தினருக்கும் அடிமையாக ஆகிறான்.

ஆதலால் இந்த மூன்றும் தள்ளத் தக்கவைகள். ஆதலால் அரசன் ஆல், அத்தி, அரசு, இச்சி இவைகளின் பழங்களை நசுக்கி அதன் ரஸத்தை அருந்தினால் எந்தவிதமான தோஷமும் ஏற்படாது என்று ராமன் கூறினார்.

இந்தக் கதையால் யாகத்தில் க்ஷத்ரியனுக்கு ஸோமபானம் இல்லை. அறிவாளிகள் இருந்து அவர்களை விலக்கி யாகம் செய்யக்கூடாது. அழைத்தோ அழைக்காமலோ வந்த அந்தணர்களை அவமதிக்கக் கூடாது. நாம் அனுஷ்டிக்கும் கர்மாக்களுக்கு தோஷங்கள் ஏற்பட்டால் அது நம் ஸந்ததியை பாதிக்கும் என்ற பல விஷயங்கள் நமக்கு விளங்குகின்றன. ■

---

முன் அட்டைப்படம் :

வெளியே : ஸ்ரீ குருவாயூரப்பன்

உள்ளே : 1. மும்பை ஸ்ரீ ராமமூர்த்தி அவர்கள், பாகவத ஸப்தாஹ ஶதக்ரது பாராயணத்திற்கு கலந்து கொள்ளும் பாகவதர்களுக்கு தர்பாசனம், பாகவத புத்தகம், ஸரஸ்வதிபீடம் அளிக்கிறார்கள்.

2. ஸப்தாஹ ஶதக்ரது மஹோத்ஸவத்தில் பாகவத பாராயணம்.

பின் அட்டைப்படம் :

உள்ளே : 1. சீர்காழி திருநாங்கூர் திருதெற்றியம்பலம் திவ்யதேசத்தில் ஸ்ரீ பள்ளிகொண்ட ரங்கநாதர்.

2. திருத்தெற்றியம்பல திவ்யதேசம் மஹாஸம்ப்ரோக்ஷணம் அன்று.

வெளியே : சைதன்ய மஹாப்ரபு, பக்தர்களுடன் நாம ஸங்கீர்த்தனம் செய்யும் காட்சி.

# *எந்தரோ மஹானுபாவுலு - 25*

ஒரு ஸமயம், வீதியில் நிமாயி தனியாக விளையாடிக் கொண்டிருந்தபொழுது அவர் அணிந்திருந்த தங்க நகைகளால் கவரப்பட்டு திருடன் ஒருவன் அவரைத் தூக்கிக்கொண்டு சென்றுவிட்டான். அவரைத் தொட்ட மாத்திரத்திலேயே திருடனுக்கு விசித்திரமான தசை ஏற்பட்டு அவனுக்கு தனது செயல்மீது வெறுப்பு ஏற்பட்டு பச்சாதாபம் ஏற்பட்டது. நிமாயியின் தாமரைப் பூப்போன்ற சரணகமலத்தைக் கண்டு அவனது உள்ளம் உருகிவிட்டது. நிமாயியோ அழகாக பயமின்றி சிரித்துக் கொண்டே இருந்தான்.

ஜகத்தை உத்தாரணம் செய்ய வந்த நிமாயியின் க்ருபைக்குப் பாத்திரமான முதன்முதல் நபர் அந்த திருடன்தான். இங்கு குழந்தையைக் காணாமல் அனைவரும் பரபரப்படைந்தனர். ஒவ்வொருவரும் ஒரு திசையில் தேட ஓடினர். சசீமாதாவோ வீடுவீடாக அலறிக்கொண்டே ஓடினாள். அண்ணா விஶ்வரூபரும் ஒரு பக்கம் தேடப்போனார்.

இதற்குள் நிமாயியை தூக்கிக்கொண்டு சென்ற திருடன் மெதுவாக நிமாயியை வீட்டிலேயே கொண்டு விட்டுச்சென்றான். அன்றிலிருந்து அவன் திருடும் தொழிலையும் விட்டுவிட்டான். பிறகு ஒருவன் ஓடி வந்து ''குழந்தை வீட்டிலேயே விளையாடிக்கொண்டு இருக்கிறான்'' என்ற செய்தியைச் சொல்ல, அனைவரும் நிம்மதியடைந்து வீட்டை அடைந்து குழந்தையை வாரியணைத்து உச்சிமோந்து மகிழ்ந்தனர்.

ஒருநாள் சசீமாதாவுக்கு வீட்டுக்குள் பெரிய வெளிச்சமும் மிகவும் தேஜோமயமான புருஷர்கள் நிமாயிக்கு பூஜை செய்து ஸ்துதி செய்து கொண்டிருப்பது போலவும் ஒரு காட்சி ஏற்பட்டது. பயந்து போய் சசீமாதா வீட்டுக்குள் ஓடிச் சென்று பார்த்தால் நிமாயி நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தான். சசீதேவி இதை ஜகன்னாதமிச்ராவிடம் கூறினாள். அவரோ, ''எனக்கு முன்பே தெரியும். நிமாயி ஸாதாரண பாலகன் இல்லை. அவன் மஹாபுருஷனாக வருவான்'' என்றார்.

இதே போல் ஒரு ஸமயம் முற்றத்தில் ஶங்கம், சக்ரம், த்வஜம் போன்ற ஶுபசின்னங்களுடன் கூடிய சின்னஞ்சிறு பதங்களை கண்டு ஆச்சரியமடைந்த சசீதேவி அந்த சரண சின்னங்களை ஜகன்னாத மிச்ராவைக் கூப்பிட்டு காண்பிக்க அந்த தம்பதிகள் அந்த சரண தூளியை

எடுத்து சிரஸில் தரித்துக்கொண்டனர். மிச்ரா சொன்னார், ''பாலகோபால டாகுர், சரீரத்துடன் நமது வீட்டு முற்றத்தில் விளையாடுகிறார் போலும். இது நமது பரம சௌபாக்யமன்றோ!'' என்றார். அவர்களிருவரும் நிமாயியின் சின்னஞ்சிறு பாதங்களிலும் அதே திவ்ய சின்னங்களைக் கண்டனர். உடனே தனது மாமனாரான நீலாம்பர சக்ரவர்த்தியை அழைத்து நிமாயியின் கால், கை ரேகைகளை காண்பித்தார். அவர் ''இது ஸாதாரண குழந்தையில்லை. நான் இவனது ஜாதகத்தையும் ஏற்கனவே பார்த்துவிட்டேன். எதிர்காலத்தில் இவனால் உலகிற்கு பெரிய நன்மை ஏற்படப்போகிறது'' என்று அவர் சொன்னார்.

ஒருநாள் மிச்ரா, நிமாயியிடம், ''நிமாயி! உள்ளேயிருந்து புத்தகம் எடுத்துவா'' என்றார். சிரித்துக்கொண்டே நிமாயி உள்ளே சென்றார். மிச்ராவுக்கு நிமாயியின் கால்களிலிருந்து மதுரமான நூபுரத்வனி கேட்டுக் கொண்டேயிருந்தது. சசீதேவியிடம், ''நீ நிமாயிக்கு நூபுரம் அணிவித்திருக்கிறாயா என்ன?'' என்று கேட்டார். அவளோ, ''நான் நிமாயிக்கு காப்பைத் தவிர வேறு ஏதும் அணிவிக்கவில்லையே'' என்று சொன்னதும் அவர் மௌனமாகிவிட்டார்.

ஒரு ஸமயம், அன்னையுடன் கோபித்துக்கொண்டு நிமாயி மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தார். அன்னை எவ்வளவோ ஸமாதானம் செய்தும் ரோஷத்துடன் உட்கார்ந்திருந்தார். சசீதேவிக்கும் கோபம் வந்துவிட்டது. வீட்டைவிட்டு வெளியே செல்லத் துவங்கினாள். அப்போது நிமாயி தனது கோமளமான கரத்தினால் அன்னையைப் பிடித்து இழுத்தார். திரும்பிய அன்னையின் மனம் இளகிவிட்டது. நிமாயியின் அனேக அலௌகிகமான லீலைகள் அவளுக்கு நினைவுக்கு வந்தது. திடீரென அவள் மூர்ச்சித்து விழுந்தாள்.

நிமாயி மிகவும் பயந்து அருகிலிருந்த ஸ்த்ரீகளைப் பார்த்து, ''அம்மாவுக்கு என்ன? எது தந்தால் அம்மா சரியாக ஆவாள்?'' என கவலையுடன் கேட்டார். ஒருத்தி, இளநீர் தந்தால் சரியாகிவிடும் என்று சொன்னதும் ஓடிச்சென்று எங்கிருந்தோ இளநீரைக் கொண்டு வந்து அன்னைக்கும் புகட்டினார். மெதுவாக சசீமாதா கண் விழித்தாள். நிமாயி, அம்மாவிடம், ''ஏனென்றே தெரியவில்லை. நான் உன்னை இப்படிப் பாடாக படுத்துகிறேன். இனி நான் ஸமத்தாக இருக்கிறேன்'' என்றதும் சசீமாதா ஆனந்தம் மேலிட்டு குழந்தையை இறுகிக் கட்டிக்கொண்டாள்.

ஒருநாள் நிமாயி காரணமின்றி பெரிதாக அழ ஆரம்பித்தான். அன்னையும் தந்தையும் ஸமாதானம் செய்து ஓய்ந்து போய், ''உனக்கு என்னதான் வேணும். ஏன் இப்படி கட்டுக்கு அடங்காமல் அழுகிறாய்? நீ கேட்பதை தருகிறோம். தயவுசெய்து என்ன வேணும் என்று சொல்'' என்று கேட்டனர். உடனே அழுதுகொண்டே நிமாயி, ''ஜகதீச பண்டிதர், ஹிரண்ய பண்டிதர் ஆகியோரின் வீட்டில் இன்று பகவானுக்கு நைவேத்யம் செய்ய பண்ணியிருக்கும் உணவு எனக்கு இப்பொழுது வேண்டும். அதைச் சாப்பிட்டதும் நான் அழுகையை நிறுத்திவிடுவேன்'' என்றார். இதைக் கேட்டதும் அனைவரும் வாயடைத்துப் போய்விட்டனர். பூஜைக்கு செய்து வைத்திருக்கும் நைவேத்யத்தை பூஜைக்கு முன் அவர்கள் வீட்டிற்குச் சென்று, எங்கள் பாலகனுக்கு வேண்டும் என எப்படிக் கேட்பது என யோசித்தனர்.

நிமாயியோ, மேலும் விக்கி விக்கி அழ ஆரம்பித்தார். அன்னை மெதுவாக, ''நிமாயி உன் தோழர்கள் எல்லாரும் நீ இப்படி அழுவதைப் பார்த்து சிரிக்கமாட்டார்களா? பகவானுக்குப் பூஜை செய்வதற்குமுன் இனிப்பை சாப்பிட்டால் அது பாவமில்லையா? பூஜை முடியட்டும். நான் அவர்களிடம் சென்று கேட்டு வாங்கிவருகிறேன்'' என்றாள். அன்னையின் கெஞ்சலுக்குத் துளிகூட நிமாயி மசியவில்லை. அழுகை நிற்கவேயில்லை. இதற்குள் யாரோ அந்த இரண்டு பண்டிதர்கள் வீட்டிலும் இந்த விஷயத்தைப் பற்றிச் சொல்ல, அவர்களுக்கு நிமாயிக்குத் தங்கள் வீட்டில் இன்று பகவானுக்கு நைவேத்யம் தயாராவது பற்றி எப்படித் தெரியும் என்று ஆச்சரியம் ஏற்பட்டது.

உடனே அவர்கள் ப்ரஸன்னமாக பகவானுக்கு நைவேத்யம் செய்ய வைத்திருந்த இனிப்புகளை எடுத்துக்கொண்டு வந்து நிமாயிக்கு ஸந்தோஷத்துடன் கொடுத்தனர். எல்லாவற்றிலிருந்தும் சிறிது சிறிது எடுத்து உண்டதும் நிமாயி அழுகையை நிறுத்தி ஸாந்தமானார். அன்னைக்கு நிமாயியின்மீது ஏதாவது பூதபிசாச உபத்ரவம் இருக்குமோ என கவலை உண்டாகிவிட்டது. அவள் உடனே பகவானிடம் வேண்டிக் கொண்டு அனேக ப்ரார்த்தனைகளை செய்துகொண்டாள்.

இப்படி விதவிதமாக பால லீலைகளை செய்து பெற்றோரையும் மற்றவரையும் வியப்பிலாழ்த்திய நிமாயிக்கு ஐந்து வயதாகிவிட்டது. அவருக்கு அக்ஷராப்யாஸம் செய்ய ஏற்பாடாகியது. கையில் ஏடும், எழுதுகோலும் தந்தை எடுத்துக்கொடுத்தார். நிமாயி எழுதுகோலால்

உடம்பு முழுவதும் கோடுகள் போட்டுக்கொண்டார். நெற்றியில் பெரிய திலகமிட்டுக் கொண்டார். ''அம்மா உன் வீட்டுக்கு பெரிய வைஷ்ணவர் வந்திருக்கிறார். பிக்ஷை செய்துவை'' என்றார். இவரைப் பார்த்ததும் சசீதேவி சிரித்துக்கொண்டே தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு நிமாயி இப்படி விளையாட்டுப்பிள்ளையாக உபத்ரவம் செய்யக்கூடாது அப்பா. நன்றாகப் படிக்கவேண்டாமா? நீ இனி குழந்தை இல்லையப்பா. உன்னை ஒத்த குழந்தைகள் பெரிய பெரிய புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்து விட்டனர். நீயோ ஸதா வீட்டிலேயே விளையாடிக் கொண்டிருக்கிறாயே! என்று சொன்னாள்.

அன்னையின் சொற்களை கேட்ட நிமாயி, சிரித்துக்கொண்டே மற்ற பிள்ளைகளுடன் விளையாடச் சென்றுவிட்டார். மற்ற பிள்ளைகளுக்கு நிமாயிதான் நடனமாடக் கற்றுத் தருவார். நான்கு நான்கு பிள்ளைகளுடன் கைகோத்துக்கொண்டு சுற்றி சுற்றி நடனமாடி கீழே விழுந்து புழுதியில் புரள்வார். கையை உயரே உயர்த்திக்கொண்டு ''ஹரிபோல் ஹரிபோல்'' என்று கூவிக்கொண்டு வெகுநேரம் நடனமாடுவார். தெருவில் போகும் பண்டிதர் முதல் பாமரர் வரை நிமாயி மற்ற பிள்ளைகளுடன் விளையாடும் விளையாட்டை நின்று கவனித்து ரசித்து விட்டு செல்வார்கள். வயது ஏற ஏற விஷமமும் கேளிக்கையும் அதிகமாகியதே தவிர நிமாயிக்கு படிப்பில் துளிகூட நாட்டம் ஏற்படவில்லை.

நிமாயி தன் பாலலீலைகளால் அனைவரையும் ஸுகப்படுத்திக் கொண்டிருந்தார். சில சமயம் நாய்க்குட்டியை பிடித்துக்கொண்டு வந்து நாள் முழுதும் வீட்டிற்குள் கட்டி வைத்து அதற்கு பருப்புசாதம் ஊட்டி விளையாடுவார். அம்மா அதை விரட்டினாலோ இவர் அழும் அழுகையை தாளவே முடியாது. சில ஸமயம் பக்ஷிகளை பிடிக்க ஓடுவார். சில ஸமயம் கன்னுக்குட்டிகளோடு விளையாடுவார், அவற்றுடன் மெல்ல மெல்ல என்னவோ பேசிக்கொண்டே இருப்பார்.

ஊரிலுள்ள அனைவர் வீட்டிற்கும் தன்னிஷ்டத்துக்கு நுழைவார். பெண்களுக்கு நிமாயி என்றால் கொள்ளை பிரியம். ஒருத்தி சொல்வாள், ''நிமாயி உனக்கு நான் ஸந்தேஷ் (ஒருவிதமான பெங்கால் தேசத்து இனிப்பு) தருகிறேன். கொஞ்சம் நடனமாடி காண்பி'' என்பாள். உடனே நிமாயி முதலில் இனிப்பு தந்தால் தான் நடனம் என்பார். ஸந்தேஹ், லட்டு, பேடா எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு வாயிலும் திணித்துக் கொண்டு மீதியை கையில் வைத்துக் கொண்டு கையைத் தூக்கி தூக்கி

அழகாக நடனம் ஆடிக்காட்டுவார். இவ்விதம் நடனமாடியே நிறைய திண்பண்டங்கள் பெற்று வருவார். இவ்விதம் இவர் அனைவர் மனத்தையும் கவர்ந்து எல்லோருக்கும் பரம ஆனந்தத்தைக் கொடுத்துவிட்டு வருவார்.

ஒருநாள் வெளியிலிருந்து ஓடிவந்து, ''அம்மா எனக்கு மிகவும் பசிக்கிறது. ஏதாவது சாப்பிடக் கொடு என்றார். அம்மா தின்பண்டம் கொண்டு வந்து தந்தாள். ஆனால் நிமாயி மண்ணை வாரித் தின்ன ஆரம்பித்தார். சிறிது நேரம் கழித்து அங்கே வந்த அன்னை நிமாயி மண்ணைத் தின்றுகொண்டிருப்பதைக் கண்டு பதறி, ''நிமாயி ஏன் மண்ணைத் தின்கிறாய்'' என்று அதட்ட, நிமாயி ''அம்மா நீயும் எனக்கு மண்ணைத்தானே தந்தாய்'' என்றார். உடனே அன்னை, ''நான் உனக்கு பாலும், அவலும் தந்திருக்கிறேன். நீ அதை விட்டு மண்ணைப்போய் சாப்பிடுகிறாயே'' என்றாள். அதற்கு நிமாயி, ''அம்மா எல்லாமே மண் தானே. எல்லா பதார்த்தமும் மண்ணின் விகாரங்கள்தான்'' என்றார். அன்னைக்கு இந்த ரஹஸ்ய பேச்சுகள் ஒன்றும் விளங்கவில்லை.

அன்னை சொன்னாள். நிமாயி, எல்லாம் மண்தான் ஆனாலும் ஒவ்வொன்றுக்கும் தனி உபயோகம் உண்டல்லவா? பானையும் மண்ணால் ஆனது தான் ஆனால் அதில் தண்ணீர் வைத்துக்கொள்கிறோம். ஆனால் மண்ணில் தண்ணீரை விட்டால் காய்ந்து தானே போகும்'' என்று சொன்னாள். உடனே நிமாயி சிரித்துக்கொண்டே, ''சரி அம்மா, இனி நான் மண்ணை தின்ன மாட்டேன், பசித்தால் நீ தரும் உணவையே உண்கிறேன்'' என்றார். இவ்விதம் விதவிதமான செய்கைகளாலும் விளையாட்டுப் பேச்சுக்களாலும் அன்னைக்கு திவ்ய சுகமளித்துக் கொண்டு தன் பால பருவத்தைக் கழித்தார்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

---

நம்பிக்கை இல்லாவிட்டால் நம்முடன் இறைவனே வந்து நின்றால்கூட நாம், யாரோ என்று அலக்ஷியமாக இருந்து ஏமாந்து விடுவோம். நம்பிக்கை மட்டும் இருந்தால், கல்லிலேயே கூட இறைவன் தோன்றி பேசுவான்.

நம்பிக்கைதான் எல்லாவற்றுக்கும் ஆதாரம்.

-ஸ்ரீ ஸ்வாமிகள்

# ஜோதிஷம் - 4

– ஸ்ரீ ஸ்வாமிகள்

ஜோதிட ஶாஸ்த்ரங்களிலும் பல பத்ததிகள் இருந்து வருகின்றன. ஜைமினி பத்ததி, ஸ்ரீபதி பத்ததி, க்ருஷ்ணமூர்த்தி பத்ததி என்று பல பத்ததிகள், அந்தந்த முறையை ஏற்படுத்தியவர்களின் பெயரைக் கொண்டே இருந்து வருகின்றன. இதுபோல் மேலும் பல பத்ததிகள் இருந்து வருகின்றன. க்ருஷ்ணமூர்த்தி பத்ததி என்று அழைக்கப்படும் பத்ததி, ஸமீப காலத்தில் வாழ்ந்த க்ருஷ்ணமூர்த்தி என்பவரால் ஏற்படுத்தப்பட்டது. ஹிந்து Traditional Astrologyயையும், Western Astrologyயையும் combine செய்த ஒரு பத்ததி இது.

மேலும் இவர் உபயோகப்படுத்திய அய்ந்நாம்சத்தில் வித்தியாசம் இருக்கிறது. ஒரு ஜாதகத்தில் ஒரு குறிப்பிட்ட பலாபலனை நிர்ணயிக்க பல ஸம்ஸ்க்ருத / தமிழ் பாடல்களை மனனம் செய்து, அவைகளை ஞாபகப்படுத்தி, அந்த க்ருஹநிலைக்கு ஏற்ற தஶாபுத்தி, க்ருஹசாரம், கோசாரம் இவைகளையெல்லாம் Apply செய்து ஒரு முடிவுக்கு வருவது என்பது மிக ஶ்ரமமாக இருக்கும். க்ருஷ்ணமூர்த்தி இதில் ஒரு புதிய பாதையை கண்டுபிடித்தார்.

உதாரணமாக ஒருவருக்கு எப்பொழுது விவாஹம் ஆகும் என்பதை தீர்மானிக்க, குடும்ப ஸ்தானமான இரண்டாவது வீட்டையும், களத்தர ஸ்தானமான ஏழாவது வீட்டையும் லாபஸ்தானமான பதினோராவது வீட்டையும் மட்டும் பார்த்து பலாபலன்களைக் கூறி சுலபமாக ஒரு முடிவுக்கு வந்துவிட முடியும். இது போல், சுலபமாக ஒரு சூத்திரம் போல் (Formula) ஏற்படுத்திக்கொண்டு பலாபலன்களை அறிய வழிவகுத்துக் கொடுத்தார். மேலும் அதில் வெற்றியும் கண்டார்.

அவரிடம் யாராவது ஜோதிட விஷயமாக ஆலோசனை கேட்க வந்தால், கேட்க வந்த நேரத்தை வைத்தே, கேட்பவரின் ஜாதகத்தை சரியாக எழுதிவிடும் திறமை பெற்றவராக இருந்தார். மேலும் இவர், ஒருவருக்கு எந்தத் தேதியில் எத்தனை மணிக்கு மாங்கல்ய தாரணம் நடக்கும் என்பவற்றையும், ஒரு விமானத்தின் சக்கரம் எந்த வினாடியில் பூமியைத் தொடும் என்பது போன்ற விஷயங்களைச் சொல்வதிலும், மிக

ஸமர்த்தராக இருந்தார். இங்ஙனம் இவர் துல்லியமாகக் கூறிப் பலரை ஆஶ்சரியத்தில் ஆழ்த்தியதும் உண்டு.

மேலும் ஜாதகம் இல்லாமல் சில ப்ரச்சனைகளுக்காக தன்னை அணுகுபவர்களை 247க்குள் ஒரு எண்ணை கூறச் சொல்லி, அதை வைத்துக் கொண்டே துல்லியமாக பலாபலன்களைக் கூறிவிடுவார். இவருக்கு ஜோதிடத்தில் இருந்த மேதாவிலாசத்தைப் பார்த்த காஞ்சி மஹாஸ்வாமிகளும் இவரை கௌரவித்தார்கள். மேலும், பாரத வித்யா பவன், முதன்முறையாக ஜோதிட வல்லுனரான க்ருஷ்ணமூர்த்தியை அழைத்து அவ்வப்பொழுது விரிவுரைகளை நிகழ்த்தி அவரை கௌரவித்தது.

ஜோதிட ஶாஸ்த்ரத்தில் 'ப்ரஶ்ன ஆரூடம்!' என்பது மிகவும் முக்கியமான அங்கம் வகிக்கிறது. ஒருவனுடைய பிறந்த நேரத்திற்கு ஒரு ஜாதகத்தைக் கணித்து எப்படி அதன் பலாபலன்களை கூறுகின்றோமோ, அதுபோல் ஒருவர் ஒரு ஜோதிடரைப் பார்த்து, தன் ப்ரச்சனையைக் குறித்து எழுப்பும் கேள்வி உதயமான நேரத்தைக் கொண்டு ஒரு ஜாதகத்தைக் கணித்து (கேள்வி பிறந்த நேரம்) அந்த கேள்விக்கான பலாபலன்களை கூறுவதே ப்ரஶ்ன ஆரூடம் எனப்படும்.

ஆனால் இந்தக் கேள்வி கேட்பவருக்கு அந்த ப்ரச்சனை பற்றிய சிந்தனை தீவிரமாக இருக்கவேண்டும். மேலும் ஒரு ஜோதிடரை அணுகி, அந்த ப்ரச்சனைக்கு தீர்வு காணும் உந்துதலும் தீவிரமாக இருக்கவேண்டும். மேலும் இந்த ப்ரஶ்ன ஆரூடத்தின் மூலம் எந்த கேள்விக்காக ப்ரஶ்னம் போடப்பட்டதோ அதற்கு மட்டுமே விஸ்தாரமாக பலாபலன்களைக் கூறமுடியும்.

ஒருவன் பிறந்த நேரத்தைக் கொண்டு கணித்த ஜாதகத்தைக் கொண்டே முழு வாழ்நாளின் பலாபலன்களைத் துல்லியமாகக் கூறிவிட முடியும். இந்த பலாபலன்களை கோசாரங்கள் பாதிக்காது.

ஸகுணாரூடம் என்பதும் ஜோதிட ஶாஸ்த்ரத்தில் ஒரு முக்கியமான அங்கமாகும். ஒருவர் கேட்கும் கேள்விக்கு எந்த விதமான நக்ஷத்ரங்கள், க்ருஹங்கள் போன்றவைகளை கணக்கில் எடுத்துக்கொள்ளாமலும், எந்தவிதமாக கணக்கைப் போடாமலும், அந்த தருணத்தில் கிடைக்கும் ஸகுணங்களைக் கொண்டே பலாபலன்களைக் கூறுவது ஸகுணாரூடம் ஆகும். இதை அடுத்த இதழில் பார்ப்போம்.

(தொடரும்)

# *மஹாபாரத கதைகள்*

**– பதிவ்ரதா மஹாத்ம்ய பர்வம்** (தொடர்ச்சி)

ஸத்யவான் தன் மனைவி ஸாவித்ரியிடம், ‘‘என்னுடைய தலைவலி போய்விட்டது. நான் இக்கணமே எனது மாதா, பிதாக்களைக் காண விரும்புகிறேன். ஒரு காலத்திலாவது நான் இதற்கு முன் அகாலத்தில் ஆஶ்ரமத்தைவிட்டு வெளியில் வந்தவனல்லன். மாலைக்காலம் வராதபொழுதே என் தாய், நான் செல்வதைத் தடுப்பாள். பகலில் கூட நான் காணாமல் போனால் என் பெற்றோர் பரிதவிப்பர். இதன் காரணமாக பன்முறை நான் எனது மாதாபிதாக்களால், ‘‘மிகவும் தாமதித்து வருகிறாய்’’ என்று தாபத்துடன் கண்டிக்கப்பட்டு இருக்கிறேன். இப்பொழுது என் நிமித்தம் அவர்களுக்கு என்ன நிலைமை ஏற்பட்டு இருக்குமோ என எனக்குக் கவலையாக உள்ளது.

எனது தாய் முதியவள். தந்தையும் முதியவர். கண் பார்வை இழந்தவர். அவர்களுக்கு நான் ஊன்றுகோல் போல் அல்லவா? இந்த ராத்திரியில் இங்கு நித்திரை செய்தால், என் தாய், தந்தையர் நித்திரை செய்யாமல் வருந்துவர். அத்தகைய நித்திரையை நான் வெறுக்கிறேன். எனது மாதா, பிதாக்களை விட்டு நான் உயிர்வாழ விரும்பவில்லை. இது நிச்சயம். நான் எப்படி எனது மாதா, பிதாக்களை பற்றி கவலைப்படுகின்றேனோ, அப்படி நான் என்னைப் பற்றியும் கூட கவலைப்படுகிறது இல்லை. அவர்கள் எனக்கு தெய்வங்கள், அவர்களும் என்னிடத்தில் அளவில்லாத ப்ரீதிகொண்டு இருக்கிறார்கள்’’ என்று சொன்னான்.

இவ்வாறு அழுதுகொண்டு கூறும் தனது கணவனைப் பார்த்து ஸாவித்ரி, ‘‘என்னால் தவமானது செய்யப்பட்டிருந்தால், என்னால் தானமும், ஹோமமும் செய்யப்பட்டிருந்தால், இன்றைய இரவானது எனது மாமியார்க்கும், பர்த்தாவிற்கும், மாமனாருக்கும் நல்லதாக இருக்கட்டும், விளையாட்டாகக் கூட நான் பொய் சொன்னதாக நினைவில்லை. அந்த ஸத்தியத்தினால் எனது மாமனாரும், மாமியாரும், பர்த்தாவும் சுகத்தை அடையட்டும்’’ என்றாள்.

பிறகு ஸத்தியவானும், ஸாவித்ரியும் ஆலோசித்து அப்பொழுதே ஆஶ்ரமம் நோக்கிக் கிளம்பினார்கள். ஸத்யவான், ''ஸாவித்ரி, நடந்து பழக்கமுள்ளதால் வழிகள் என்னால் நன்கு அறியப்பட்டு இருக்கின்றன. மரங்களின் நடுவில் உள்ள நிலவினாலும் வழியை காண்கிறேன். நான் ஸ்வஸ்தனாகவும், பலமுள்ளவனாகவும் உணர்கிறேன். இதோ இந்த பலாஸ மரங்களடர்ந்த தோப்பின் வழி இரண்டாகப் பிரிகிறது. அதற்கு வடக்கே உள்ள வழியில் செல். மாதா, பிதாக்களைப் பார்க்க ஆவலாய் உள்ளேன்'' என்று பேசிக்கொண்டே சென்றான்.

இதே ஸமயத்தில் தனது ஆஶ்ரமத்தில் த்யுமத்ஸேனன், தனது புத்திரன் வராமையால், தனது பார்யையுடன் பலவிடத்திலும் தேடி ஸஞ்சலம் அடைந்தான். அதே ஸமயத்தில், அவனுக்காக ஸாவித்ரி, யமதர்மராஜனிடம் வாங்கிய வரபலத்தால், இழந்த கண்களை பெற்றவனாகி, ஒளிமிக்கவனானான். இவ்வாறு ஆச்சர்யமும், ஸந்தோஷமும், துக்கமும் கலந்தவனாகக் காணப்பட்டான். அவனும், அவன் பார்யையும் பலவிடங்களிலும் ஸத்யவானைத் தேடி அலுத்துப் போனார்கள்.

ஏதாவது ஒரு ஶப்தம் கேட்டாலும் ஸத்யவான் வருவதாக எண்ணி, ஆர்வமடைந்து, பின்னர் அவன் வராததால், ஏமாற்றமும் மேலும் வ்யாகூலமும் அடைந்தார்கள். அப்பொழுது அங்கு வஸிக்கின்ற அனைத்து ப்ராஹ்மணர்களும் அவர்களுக்கு ஹிதமான வசனங்களைக் கூறி, அவர்களை தேற்றினார்கள். த்யுமத்ஸேனனும் அதனால் ஆறாது ஸத்யவானையும், ஸாவித்ரியும் பலவாறு நினைவுகூர்ந்து வருந்தி அழுதான்.

அப்பொழுது அங்கிருந்த ஸுவர்ச்சஸ் என்கிற நாமம் கொண்ட ஸுத்த வாக்குடைய ஒரு ப்ராஹ்மணர், த்யுமத்ஸேனனைப் பார்த்து, ''இந்த ஸத்யவானின் மனைவி ஸாவித்ரி தவம் கொண்டவளும், இந்த்ரிய நிக்ரஹம் கொண்டவளுமாக இருத்தலால், ஆசாரமுள்ளவளாயிருத்தலால், இவன் ஜீவித்து உள்ளான்'' என்றார்.

கௌதமர் என்பவர், ''என்னால் வேதங்கள் அங்கங்களுடன் கூடியவைகளாக அத்யயனம் செய்யப்பட்டன. பெரிய தவமும் செய்யப்பட்டது. பால்யத்திலிருந்தே நான் ப்ரஹ்மச்சர்யம் அனுஷ்டித்து வந்துள்ளேன். குருவும், அக்னியும் என்னால் ஸந்தோஷப்பட்டு

உள்ளார்கள். மன அடக்கத்துடன் எல்லா விரதங்களையும் அனுஷ்டித்து வந்துள்ளேன். எப்பொழுதும் என்னால் நேர்த்தியான உபவாஸமும் செய்யப்பட்டு இருக்கிறது. இதனால் நான் பிறர் செய்யவேண்டிய எல்லாவற்றையும் அறிகிறேன். ஸத்யவான் ஜீவித்திருக்கிறான் என்று நான் சொல்வதை நம்புங்கள்'' என்று சொன்னார். அவருடைய சிஷ்யனும் அதை உறுதிப்படுத்தினான்.

ரிஷிகள் பலவிதமாய் இதையே சொன்னார்கள். தால்ப்யர் என்னும் மஹரிஷி, ''உமக்கு கண் உண்டானமையாலும், ஸாவித்ரி விரதம் செய்து, ஆஹாரம் செய்யாமல் கானகம் சென்றமையாலும் ஸத்யவான் உயிருடன் இருக்கிறான்'' என்றார்.

இதனால், த்யுமத்ஸேனன் ஓரளவு கலங்காத சித்தத்தை அடைந்தவனாகி, சிறிது கவலையையும் ஒழித்தான். அதே ஸமயம், ஸத்யவானும் ஸாவித்ரியுடன் அதிக ஸந்தோஷமுடையவனாக அந்த ஆஶ்ரமத்துள் அனைவராலும் மிகுந்த ப்ரீதியுடன் வரவேற்கப்பட்டவனாக நுழைந்தான்.

(தொடரும்)

# *பாலகர்களுக்கு ஒரு கதை - 31*

குருவாயூர் ஸப்தாஹ ஸதக்ரதுவின் பூர்த்தியில் குருவாயூரப்பனுடைய இரண்டு சுவையான லீலைகளை ஸ்ரீஸ்வாமிகள் கூறினார்கள். அவைகளை நாம் இந்த முறை பாலகர்களோடு பகிர்ந்து கொள்வோம்.

ஒரு ஸமயம், குருவாயூருக்கு ஸமீபத்தில் உள்ள கிராமத்தில் ஒரு பக்தர் குருவாயூரப்பனிடமே அனன்ய பக்தி உடையவராக வாழ்ந்து வந்தார். நம்மிடம் பகவான் எதையெல்லாம் அனுக்ரஹித்துள்ளானோ அதையெல்லாம் ஈஸ்வரார்ப்பணம் செய்யவேண்டும். நல்ல வாக் சக்தி இருக்குமானால், அதைக்கொண்டு பகவானுடைய குணங்கள் சொல்ல வேண்டும். தனம் நிறைய இருந்தால் அதைக்கொண்டு பாகவதர்களுக்கும், பகவானுக்கும், ஏழைகளுக்கும் உதவி செய்யவேண்டும். திடகாத்ரமான ஸரீரம் இருந்தால் உடலால் ஸாதுக்களுக்கும் பகவானுக்கும் தொண்டு செய்து உழைக்கவேண்டும். நல்ல குரல் வளம் இருந்தால் அதைக் கொண்டு பகவானை கானம் செய்து மகிழ்விக்கவேண்டும்.

இந்த பக்தரிடம் நிறைய தென்னந்தோப்புகள் இருந்தன. அவைகளில் கிடைக்கும் தேங்காய்களை ஒரு பங்கை வருடந்தோறும் குருவாயூரப்பனுக்கு ஸமர்ப்பிப்பது என்பது அவருடைய வழக்கம். அது போல் அந்த வருடம் விளைந்த தேங்காய்களை மூட்டையாகக் கட்டிக் கொண்டு குருவாயூரப்பனுடைய நாமங்களைப் பாடியபடி கோயிலுக்குச் சென்று கொண்டிருந்தார். வழியில் கள்வர்கள் அவரை மறித்து மூட்டையில் உள்ள தேங்காய்களைத் தந்துவிடும்படி மிரட்டினார்கள். ஆனால் அதற்கு அவரோ இவையெல்லாம் குருவாயூரப்பனுக்குச் சேர வேண்டியவை. தாங்கள் இப்படிக் கேட்பது தவறு என்றார்.

அதற்கு அவர்கள் அந்த பக்தரை நோக்கி பரிகாசமாக, குருவாயூரப்பனுடைய தேங்காய்கள் என்றால் அவற்றிற்கென்ன கொம்பா முளைத்துள்ளது?'' என்று கேட்டார்கள். கேட்டபடியே தேங்காய் மூட்டைகளை அவருடைய கைகளிலிருந்து பலவந்தமாகப் பற்றி இழுக்க, தேங்காய்கள் எல்லாம் சிதறி ஓடின. ஆனால் ஆச்சர்யம்! எல்லா தேங்காய்களிலும் கொம்பு முளைத்திருந்தது. இன்றும் இதற்கு சாட்சியாக கொம்புமுளைத்த ஒன்றிரண்டு தேங்காய்களை கோவிலில் மாட்டி வைத்துள்ளனர்.

மற்றொரு லீலையாக நம்முடைய ஸ்வாமிகள் கூறியது, ''ஒரு ஸமயம் மிகவும் ஏழையான சிறுவன் ஒருவனுக்கு எவ்வளவு முயன்றும் பசிக்கு ஆகாரம் கிடைக்கவில்லை. பசியின் கொடுமையினால் பக்கத்தில் உள்ள ஒரு பழக்கடையில் குருவாயூரப்பனை நினைத்துக்கொண்டே சில வாழைப்பழங்களை யாரும் பார்க்காதபொழுது எடுத்துக்கொண்டான். அவற்றில் பாதியை குருவாயூரப்பனுடைய உண்டியலில் போட்டுவிட்டு மீதி பாதியை தான் சாப்பிட்டுவிட்டான். இவன் பழங்கள் திருடிய விஷயத்தை எப்படியோ தெரிந்து கொண்ட அந்தக் கடைக்காரர் அவனை அழைத்து மிரட்டினார். அவனும் ஒப்புக் கொண்டான்.

பால் வடியும் முகம் கொண்ட அவனை தண்டிக்கவும் மனமில்லை அவருக்கு. ஒரு தண்டனையாக ஏதாவது கொடுக்கவேண்டும் என்று ஆசைப்பட்ட அவர், குருவாயூரப்பன் கோயிலை முடிந்த வரை ப்ரதக்ஷிணம் செய்யச் சொன்னார். அப்படி அந்தப் பையன் ப்ரதக்ஷிணம் செய்கையில் குருவாயூரப்பனும் பின் செல்வது போல் அவருக்கு ஒரு காட்சி. அது பிரமையா, நிஜமா என்று அவருக்கு புரியவில்லை. அன்று இரவு அவருடைய ஸ்வப்னத்தில் குருவாயூரப்பன் தோன்றி ''நான்தான் அவனுடன் ப்ரதக்ஷிணம் செய்தேன்'' என்று கூறி அதற்கான காரணத்தையும் கூறலானான். அவன் திருடிய பழங்களில் பாதியை என் உண்டியலில் போட்டுவிட்டதால் அவனுக்கு வழங்கிய தண்டனையில் தனக்கும் பங்கு உண்டு என்றும், அதற்காகவே தானும் அந்தப் பையனுடன் கோவிலை வலம் வந்ததாகவும் கூறினான்.

– தொகுப்பு : **ராமு**

---

Our Website has been re-organised. Visit us at http://www.madhuramurali.org to know more about mission activities and satsang events.

The Spiritual Magazine “Madhura Murali” is also available on Web.

# ஸ்ரீஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 58

மஹாத்மாக்கள் அனுக்ரஹம் செய்யும் க்ரந்தங்களில், ஆச்சர்யப்படும் வகையில் பலவிதமான **பா**வங்கள் புதைந்து இருக்கும். பக்தர்கள் அந்த க்ரந்தங்களை எந்த **பா**வத்துடன் பார்க்கின்றனரோ அது போன்று அநேக விஷயங்கள் அதிலிருந்து ஸ்புரித்துக்கொண்டே இருக்கும். இது மஹாத்மாக்களின் க்ரந்தங்களுடைய விசேஷம்.

நாம் ஒருவரை பலவிதமாக முகஸ்துதி செய்யலாம். ஒருவரை நீங்கள்தான் பரமேஶ்வரன் என்றோ, கிருஷ்ணர் என்றோ பலவாறாக புகழலாம். இவ்வாறு நாம் சொல்வது வாஸ்தவமில்லை. மேலும் நமக்கு ஒன்றும் தெரியவும் தெரியாது. மஹாத்மாக்கள் அருளிய க்ரந்தங்களோ அப்படிப்பட்டவை அல்ல.

கௌதம மஹரிஷி அருணாசல மஹாத்மியத்தில் சொன்ன விஷயங்கள் இப்படி எழுதப்பட்டவையும் அல்ல. அவர்கள், தாங்கள் எழுதும் அனைத்து விஷயங்களையுமே அனுபவபூர்வமாகவே எழுதுகின்றனர். அவர்களுக்கு இறைவன் ப்ரத்யக்ஷம் என்பதால், அவர்கள் க்ரந்தத்தில் ஸத்தியம் தவிர வேறு ஒன்றும் இராது.

ஶங்கரபகவத்பாதாள் அனுக்ரஹம் செய்த அநேக க்ரந்தங்களை உதாரணமாக எடுத்துப் பார்த்தாலும் சரி, அல்லது வால்மீகி மஹரிஷி அருளிய ஸ்ரீமத் ராமாயணத்தை எடுத்துப் பார்த்தாலும் சரி, இம்மாதிரி பலவிதமான பாவங்கள் இருப்பது தெரியவரும். ஒரு யோகியானவர் ஸ்ரீமத் ராமாயணத்தை ஆய்ந்து பார்த்தால் அதில் அவருக்கு யோக ரஹஸ்யங்கள் இருப்பது தெரியவரும்.

பக்தனுக்கு வேண்டிய பக்தி **பா**வங்களும் அதில் இருக்கும். வேதாந்திக்கு தேவையான தத்வபரமான விஷயங்கள் அதி ஆச்சரியமாக புதைந்து இருக்கும். மஹாத்மாக்கள் எப்படி வேதஶப்தங்களை Cosmic-ல் இருந்து க்ரஹித்து லோகத்திற்கு அருளினாரோ, அது போலவேதான் இந்த க்ரந்தங்களையும் அருளினார்கள்.

ஒரு மூட பக்தன் ராமனைப் பற்றிக் கேள்விப்படுவதினால் மட்டுமே சாந்தி அடைகிறான். இப்பேர்ப்பட்ட மஹாத்மாவா, இப்படி ஒரு குணம் கொண்டவரா ராமர் என்று நினைத்து நினைத்து அன்பு கொள்கிறான். இது பக்த **பா**வம். இதையே தத்வ பரமாய் பார்த்தால், ராமனே பரப்ரும்மம். சீதையே சித்சக்தி. இந்த ராமனாகிய பரப்ரஹ்மத்தை சீதை ஆகிய சித்சக்தியிடம் ஸத்குருவான விஶ்வாமித்திரரே சேர்த்து வைக்கிறார்.

ராமர் 14 வருஷங்கள் காட்டில் வாழ்ந்தார். இந்த 14 வருடங்களே 14 லோகங்கள். பூ:, புவ:, ஸுவ:, மஹ:, ஜன:, தப:, ஸத்யம் என்று சொல்கிறோம். இந்த பூலோகத்தில் வாழ்ந்த சேஷாத்திரி ஸ்வாமிகள் வானில் செல்லும் தேவர்களைப் பார்த்தார் என்று முன்னரே பார்த்தோம். ஆக பூமி முதலிய ஒவ்வொரு ஸ்தூல லோகத்திற்கும், ஒவ்வொரு சூக்ஷ்ம லோகம் உண்டு. ஆக இவையே ஈரேழு, பதினாலு லோகங்கள். இந்த ராமர் வனவாஸம் செய்த 14 வருடங்களும், 14 லோகங்கள், ப்ரும்மலோகம் என்று ஒன்று இல்லை. ஆத்மசாக்ஷாத்காரமே ப்ரும்மலோகம்.

இந்த ராமபிரான் 14 விதமான லோகங்களில் ஸஞ்சாரம் செய்யும் காலத்தில் சித்சக்தியான சீதை பரப்ரும்மமான ராமனிடமிருந்து பிரிந்து விடுகிறாள். சித்சக்தியான சீதையை கவர்ந்ததோ தசமுகனான ராவணன். தசமுகன் என்றால் பத்து முகம். பத்து விதமான இந்திரியங்களே பத்து முகங்கள். இந்திரியங்களினால் மனம் கலங்குவதால் நமது தெய்வீகம் நம்மை விட்டு விலகுகிறது என்பதே இதைக் காட்டுகிறது.

தசமுகன் சீதையைக் கவர்ந்து செல்லும்பொழுது அவனுக்கு மூவர் துணை. அதுவே முக்குணங்கள். ஸத்வம், ரஜஸ், தமஸ் எனப்படும் இவை. இந்திரஜித்தே ராஜஸ குணம். உலகில் உள்ள அனைத்து சுகத்தையும் அனுபவிக்க ஆசைப்படுவதே ராஜஸ குணம். கும்பகர்ணனே தமோகுணம். எப்பொழுதும் சோம்பேறியாய், ஸதா தூங்கி வழிந்து, இகத்தைப் பற்றியோ, பரத்தைப் பற்றியோ கவலைப்படாமல், நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம் என்று எப்பொழுதும் இருப்பதே தமோகுணம். கும்பகர்ணன் தூங்கியே சலிப்பான். விபீஷணனே ஸத்வகுணம். தெய்வத்தை நாடுவதே ஸத்வகுணத்தின் வெளிப்பாடு. இந்த மூன்று குணங்களும் இந்திரியங்கள் வசப்பட்டு இருத்தலே இந்திரஜித், கும்பகர்ணன், விபீஷணன் ஆகியோர் ராவணனை சேர்ந்திருத்தலைக் காட்டுகிறது.

ரஜோகுணம், தமோகுணம் அழிய வேண்டுமானால் ஸத்வ குணம் மேலோங்கவேண்டும். அதற்காக அதை வளர்த்துக்கொள்ள வேண்டும். அதுவே ஸ்ரீ ராமபிரான் ஸத்வகுணமான விபீஷணனை சேர்த்துக் கொள்வதைக் குறிக்கிறது. ஸத்வகுணமான விபீஷணனை சேர்த்துக் கொண்டு தாமஸமான கும்பகர்ணனையும், ராஜஸமான இந்திரஜித்தையும் அடித்துத் தள்ளுகிறார். தசமுகனை வெற்றிகொண்டு பட்டாபிஷேகம் செய்து கொள்ளுதலே ஆத்மஸாக்ஷாத்காரம்.

சித்சக்தி எப்பொழுதும் உண்டு. சீதை பிறந்தாள் என்று ராமாயணத்தில் இல்லை. சீதை ஜனகமஹாராஜாவால் கண்டெடுக்கப்பட்டாள் என்றே இருக்கிறது. சித்சக்திக்கு இறப்பும், பிறப்பும் இல்லை. அநாதியானதும், ஸாஸ்வதமான வஸ்துவிற்கு மறைவு தான் உண்டு. ஆனால் அழிவு கிடையாது.

இந்த ஸாத்வீகமான குணத்தை துணைக்கொண்டே ராமர் மறுபடியும் சித்சக்தியுடன் சேர்ந்தார். இந்த ஸாத்வீக குணத்தை அவர் அடைய அவருக்கு அனுகூலமாயிருந்தது அவர் மனது. மனது அழிய ஒத்தாசையாயிருப்பது மனதேதான். ராமாயணத்தில் மனதை ஹனுமாராக சொல்லப்பட்டிருக்கிறது.

மனதுக்கு குரங்கு ஸ்வபாவம் உண்டு. ஒரு க்ஷணம் ஓரிடத்தில் இராது. குரங்குக் குட்டியானது மரத்திலிருந்து மரம் தாவிக்கொண்டே இருக்கும். மனதும் ஒரு பொருளிடம் கூட தொடர்ந்து தங்காது. இந்த குரங்கானது மேலும், ஒரு கையில் ஒரு பூமாலையை எடுத்துக் கொண்டு சிறிது நேரம் கூட அது அதைக் கையில் வைத்துக் கொள்ளாது. உடன் ஒரு பழத்தோலை பார்த்தால், அது பூமாலையை தூக்கி எறிந்து விட்டு, உடனே அந்த பழத்தோலை எடுத்துக்கொள்ளும். ஒரு கண்ணாடிச் சில்லைப் பார்த்தால், பழத்தோலை எறிந்து விட்டு, கண்ணாடிச் சில்லை எடுத்துக் கொள்ளும். அதுபோல் மனதும் ஒரு வஸ்துவிலிருந்து இன்னொரு வஸ்துவிற்கு தாவிக் கொண்டே இருக்கும். குரங்கு கிடைத்த வஸ்துவில் திருப்தியே அடையாது. மனதும் அதுபோல் கிடைத்த பொருளில் ஸந்தோஷமே அடையாது.

பட்டினத்தார் ஒரு பாட்டில் சொல்கிறார். ''அகப்பைக்குள் அகப்பட்ட குரங்கைப் போல், அகப்பட்டுக் கொண்டீரோ'' என்கிறார். இந்த உலக வாழ்க்கையில் ஈடுபடவும், அதிலிருந்து விடுபடவும் மனிதனுக்குத் தெரியாது. கிராமங்களில் நிலக்கடலையை தோட்டத்தில் போட்டு வைத்திருந்தால், குரங்கானது வந்து இந்த நிலக்கடலையை தின்று

சென்றுவிடும். கிராமங்களில் குரங்கை ஹனுமாரின் அம்சமாக எண்ணுவர். ஆதலால், அப்படி வரும் குரங்குகளைக் கொல்ல அவர்களுக்கு மனது இடம் கொடாது. அதைப் பிடிப்பதற்கு ஒரு எளிய பொறி வைப்பர். ஒரு அகப்பைக்குள் சிறிய ஓட்டை செய்து, அதில் நிலக்கடலையைப் போட்டு வைத்திருப்பர். அந்த ஓட்டையின் அளவும், ஒரு குரங்கின் கை உள்ளே போகுமளவே இருக்கும். இந்த குரங்கானது அந்த நிலக்கடலையை எடுப்பதற்காக, அகப்பையில் இருக்கும் ஓட்டைக்குள் கையை விடும். அது உள்ளே விட்டு, நிலக்கடலையை கையில் எடுத்துக் கொண்டு விடும். சிறிய ஓட்டை என்பதினால் நிலக்கடலையுடன் சேர்ந்து குரங்கின் கை வெளியே வராது. இந்த நிலக்கடலையை விட்டு விட்டால், கை வெளி வந்து விடும் என்று அந்த குரங்கிற்கு விளங்காது. எடுத்து எடுத்துப் பார்த்து கை வெளிவராமல் தவிக்கும். ஒரு சாக்கு எடுத்துக் கொண்டு வந்து அதன்மேல் போட்டு அதை தூக்கிச் சென்று விடுவர்.

அதுபோல் மனிதர்களும் காரியம் செய்யத் தெரியாமல் தவறாக செய்து, வெளிவரவும் தெரியாமல் தவிப்பர். இப்படிப்பட்ட மனதை ஹனுமார் போல செய்துவிட வேண்டும். ஹனுமார் போல செய்துவிட வேண்டும் என்றால் ஹனுமாருக்கு இருந்த ப்ரும்மச்சர்யம், வினயம், தீரம், பக்தி, கொண்டதாக இந்த மனதைச் செய்து விட வேண்டும். அப்பேர்ப்பட்ட குணம் உடையதாக மனது மாறி விட்டால் தெய்வீகத்திற்கு அருகில் மனதானது சென்று விடும். இதுதான் ஹனுமார் கடல் தாண்டி இலங்கை சென்று சீதாபிராட்டி பார்த்து வந்ததைக் காட்டுகிறது. தெய்வீகம் என்பது அடையப்பட வேண்டுமானால் அதற்கு மனது நாசமாக வேண்டும்.

இப்படி ஒவ்வொரு மஹாத்மாவின் கிரந்தத்திலும் ராஜயோக பரமாக, பக்தி பரமாக, தத்வ பரமாக என்று பலவிதமாக விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அதுமாதிரி இந்த அக்ஷரமணமாலை எனும் கிரந்தத்தில் ஒவ்வொரு பாட்டிற்கும் யோகபரமாக, பக்தி பரமாக, தத்வ பரமாக என்று பலவிதமாக அர்த்தம் சொல்லலாம். எல்லாவற்றிற்கும் இது பொருந்துகிறது. இடம் கொடுக்கிறது. அப்பேர்ப்பட்ட ஒரு உயர்ந்த கிரந்தம் இது.

(தொடரும்)